[1987 ஏப்ரல் 22

ஏனாதி கிராமத்தில் மின் கம்பங்கள்.

459—(*வினா எண். 13691) திரு. க. பரமலை : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் மாவட்டம்—மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஏனாதி கிராமத்தில் இருபதுக்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் இற்றுப்போய் கீழே விழும் நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்கள் நட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஒரே ஒரு சிமின்ட் மின் கம்பம் மட்டும் பழுது அடைந்து இருந்ததாக கண்டுபிடிக்கப் பட்டது.

(ஆ) மேற்படி பழுதான சிமின்ட் மின் கம்பம் 25—3—1987 அன்று மாற்றப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) மதுரை மாவட்டம் சின்னமனூரிலுள்ள வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு தண்ணீர் விடுதல் குறித்து.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் சின்னமனூர் கருக்கன்காட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள்